# கொடபொல பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 கணக்காய்விற்காக நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஒக்தோபர் 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 திசெம்பர் 14 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் அடங்கியுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கொடபொல பிரதேச சபையின் 2009 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் நவம்பர் 05 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 345,000 தொகையான உழவு இயந்திரத்தின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் செப்தெம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களுக்காக கிடைக்க வேண்டிய நீதி மற்றும் தண்டப் பணம் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(இ) மன்னைய வருடத்தின் திசெம்பர் 24 ஆந் திகதி உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 5,000,000 கடன் பணம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள மீதி உறுதிப்படுதல்களின் பிரகாரம் ரூபா 4,384,219 ஆக இருந்ததுடன் அக் கடன் பணம் கணக்குகளில் வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வருடாந்த வருமானம் பொழிப்பு (பி.ச19) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பாகச் செலுத்த வேண்டிய ரூபா 3,783,084 தொகையான பங்களிப்புப் பணம் கணக்குகளில் வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

06 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 36,592,465 ஆக இருந்ததுடன், உப பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 23,387,327 ஆக இருந்தமையால் ரூபா 13,205,138 தொகை வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 1,154,043 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதி தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 4,883,747 ஆகும்.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 40,331,317 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.3 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகளுடன் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| | நி.பி. 1645 மற்றும் நி.பி. 1646 | வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் முறைப் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டு மாதாந்த பொழிப்புடன் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பியிருக்க வேண்டியபோதிலும் 07 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் ஐஏஐ-2002/02 கொண்ட திறைசேரிச் செயலாளரின் சுற்று நிருபம் | கணனிகளின் துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பொது நிருவாக அமைச்சுச் செயலாளரின் 2005 மார்ச் 31 ஆந் திகதிய 2005/8 ஆம் இலக்க சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்தின் 11.5 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனக்கடன்களுக்காக அறவிடப்படுகின்ற 4 மூ வட்டியினை உத்தியோகத்தரிடமிருந்து அறவிட்டு வட்டிவீதங்களுக்கிடையேயான வேறுபாடு அரசினால் செய்யப்பட வேண்டிய போதிலும் முன்னைய 04 வருடங்களிலிருந்து சபைக்கு அறவிடவேண்டியிருந்த ரூபா 149,089 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா

5,111,988 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 14,095,883 ஆக காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக வருமானங்கள், உள்ளவாறான வருமானம் உட்பட நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் 2011 மார்ச் 14 ஆந் திகதிய எனது கடிததத்தின் மூலம் குறிப்பிட்ட படிவத்தில் சமர்ப்பிக்கும் படி தலைவரை வேண்டிக் கொண்ட போதும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | நிலுவை வருமானம் | | அதிகரிப்பு சதவீதப்படி |
|---|---|---|---|
| | 2010 | 2009 | % |
| | ரூபா.000 | ரூபா.000 | |
| வீதவரி மற்றும் வரி | 432 | 301 | 43.50 |
| வாடகை | 356 | 340 | 4.71 |
| ஏனையவை | 28,140 | 20,373 | 38.12 |

### 2.2.2 நிலுவை வாடகை மற்றும் கட்டணம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 432,085 தொகையான வாடகை மற்றும் கட்டணங்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 கடை வாடகை

(அ) சபைக்குச் சொந்தமான தெனியாய பஸ் நிலையத்தில் 21 கடைகள் இருந்ததுடன் அக் கடைகளை வாடகைக்கு விடுதல் தொடர்பாக 2011 நவம்பர் 03 ஆந் திகதி மேற் கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு.

(i) வாடகை ஒப்பந்த நிபந்தனை இல. 10 இற்கு முரணான 04 கடைகள் வாடகையாளரினால் வேறு நபருக்கு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் சபையின் மாதாந்த வாடகையினை விட கூடிய பெறுமதியில் அக் கடைகள் வாடகைக்கு விடப்பட்டிருந்தன.

(ii) வாடகை ஒப்பந்த நிபந்தனை இல 12 இற்கு முரணாக 05 கடைகளில் சட்டரீதியான நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆந் திகதியில் தபபா.᠄ப.பா.கொ.᠄2010.᠄01 ஆம் இலக்க சுற்று நிரூபத்தின் பிரகாரம் வாடகைக்கு விடப்பட்டிருந்த கடைகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இப் நிலையத்திலுள்ள ஆறு கடைகளிலிருந்து 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ரூபா 48,705 தொகையான நிலுவை வாடகை தொடர்பாக வாடகை ஒப்பந்த நிபந்தனை இல. 04 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 களியாட்ட வரி

1995 முதல் 2000 வரை சினிமா அரங்குகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 419,132 தொகையான களியாட்ட வரி 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதி மன்றம் ஒன்றினால் 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 671,365 இற்கான தண்டப் பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 1,268,588 தொகை முத்திரைக் கட்டணங்களாகக் கிடைக்க வேண்டியிருந்தது.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீடு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. | ரூபா. | ரூபா. '000 | ரூபா. '000 |
| ஆளுக்குரிய வேதனம் | 12,258 | 13,117 | (859) | 12,777 | 11,514 | 1,263 |
| ஏனையவை | 8,186 | 7,792 | 394 | 8,353 | 5,801 | 2,552 |
| உப கூட்டுத் தொகை | 20,444 | 20,909 | (465) | 21,130 | 17,315 | 3,815 |
| மூலதன செலவுகள் | 10,637 | 11,491 | (854) | 25,330 | 14,771 | 10,559 |
| மொத்தக் கூட்டுத் | 31,081 | 32,400 | (1,319) | 46,460 | 32,086 | 14,374 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | 01 |
| இரண்டாம் தரம் | 13 | 08 |
| ஆரம்ப தரம் | 35 | 21 |
| ஏனையவை | - | 13 |
| | 49 | 43 |

(அ) மீளாய்வாண்டில் பதவியணினரின் சம்பளத்திற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 13,116,868 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணைாளரிடமிருந்து ரூபா 8,337,500 தொகை மாத்திரமே மீளளிக்கப்பட்டிருந்தமையினால் சபைக்கு ரூபா 4,779,368 தொகையான மேலதிகச் செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரிச் செயலாளரின் 2002 சனவரி 03 ஆம் திகதி மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 14 ஆம் மற்றும் 28 ஆம் இலக்கத்தினால் உள்ளூராட்சி நிறவனங்களின் அமைய, நாளாந்த மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அவ் அறிவுறுத்தல்களுக்கு முரணாக 13 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 213,899 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது சுற்று நிருப வகையில் ஆட்சேர்ப்புக்களைச் செய்தால் நிறுவனத் தலைவருக்காக தனிப்பட்ட ரீதியில் பொறுப்பினைக் கூற வேண்டும் எனவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 செப்டம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,165,117 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சிய அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 46,662 ஆகும்.

## 2.6 பெகோ லோடர் இயந்திரம்

பெகோ லோடர் இயந்திரமொன்று (இல.எஸ்பிஇஸட்ஏ.0063) ரூபா 8,000,000 தொகையில் 2009 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு

(i) இயந்திரம் கொள்வனவு செய்தல் தொடர்பாக 2011 சனவரி 12 ஆந் திகதியன்று வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் கிடைக்கப் பெற்றிராத மல்ட்டி பக்கட் மற்றும் டிக் ஒன்றுடன் உள்ள பெகோ 2011 நவம்பர் 08 ஆந் திகதி வரையிலும் சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் கவணம் செலுத்தியிருக்கவில்லை.

(ii) வழங்குனர் ஒருவரினால் இயந்திரத்திலிருந்து கழற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்ட உதிரிப்பாகங்கள் சபைக்குக் கிடைத்திருந்தமை சபைச்

செயலாளரின் 2010 திசெம்பர் 24 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. பெகோவுடன் வழங்கப்பட்டிருந்த ஏனைய அனைத்து பாகங்களும் கழற்றப்பட்டு வெடித்திருந்தமையும் இயந்திரத்தை வேலையில் ஈடுபடுத்துவது சாத்திளமற்றிருந்தமையும் தலைவரின் 2011 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் வழங்குனருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இயந்திரத்தின் செய்ற்பாட்டுத் தன்மை பலவீனமான நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) இயந்திரம் 2010 யூலை 01 தொடக்கம் 2011 செம்தெம்பர் 30 ஆந் திகதி வரையான 16 மாத கால பகுதியில் 1380 இயந்திர மணித்தியாலங்கள் ஓடியிருந்ததுடன் செயற்பாட்டு நட்டம் ரூபா 437,597 ஆக இருந்தது.

(iv) வழங்குனரிடம் சபை ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் நிபந்தனையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட உதிரிப்பாகங்கள் வழங்கப்படாமை, உதிரிப்பாகங்கள் வழங்கல் மற்றும் பழுது பார்த்தல், தாமதம் என்பவைகளினால் இயந்திரத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பிரயோசனத்தைப் பெறமுடியாதிருந்தன அடிப்படையில் வழங்குனருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 சட்டரீதியற்ற நிர்மாணம்

அறிக்கையிடப்பட்டிருந்த சட்டரீதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக அறிவித்தல்கள் விநியோகித்தல் தவிர வேறு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் தொடர்பாக 2011 நவம்பர் 08 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

தெளிவாய ரக்வான வீதி இல. 35 என்ற இடத்தில் 248.4 சதுர மீற்றர் அளவில் மூன்று மாடிக்கட்டிடத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597.∴8 ஆம் இலக்க வர்த்தமாணி அறிவித்தலின் 6(ஊ) ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையான அங்கீகாரம் வழங்கும் போது அறவிட வேண்டிய கட்டணம் 496,800 அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.8 செயற்பாட்டு செயற்திறணின்மைகள்

(அ) முன்னைய ஆண்டின் போது சுட்டிக்காட்டப்பட்டிருந்த சபைக்குச் சொந்தமற்ற காணிகளில் அமைத்துள்ள குடலுதெனிய சனசமூக நிலையம், யஹல்வலகட சனசமூக நிலையம் மற்றும் பின்னதெனிய சனசமூக நிலையம் என்பவற்றின்

புனர் நிர்மாணங்களுக்காக ரூபா 547,382 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய காணி இது வரையிலும் சபைக்குச் சொந்தமாக்கி கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது இலங்கை மின்சார சபையிடமிருந்து ரூபா 20,300 தொகையினை மீளளிப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதிய உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகளி தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்